This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# அனிதாவின் காதல்கள்

1

*"நீர் போகுமிடத்திற்கு நானும் வருவேன்
நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்
உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்
உம்முடைய தேவன் என்னுடைய தேவன்."*

*(பைபிள்.ரூத்.)*

மகாதேவனுக்கு அனிதா மூன்றாவது பெண். சுதாவும் சுகந்தியும் அவளுக்கு மூத்தவர்கள். சுதாவுக்கு அனிதாவுக்கும் ஏறத்தாழ பன்னிரண்டு வயசு வித்தியாசம். சுதாவுக்குப் பின் சுகந்தி பிறந்தது இரண்டு வயது வித்தியாசத்தில். அதன்பின் ரொம்ப வருஷம் சும்மா இருந்துவிட்டு அனிதா.

சுதாவுக்கு கல்யாணமாகி டெல்லியில் இருக்கிறாள். அவளுக்கு இரண்டு பெண்கள், 'அச்சாச்சா' என்று இந்தியில் பேசிக்கொண்டு. 'சோடுயார், போர் யார்' என்று சென்னையில் தங்க விரும்பாத வாட்டசாட்டப் பெண்கள்.

சுகந்தியின் கணவர், இந்தியா மேப்பில் தேடினாலும் கிடைக்காத 'ஜல்பாய்குரி' என்கிற இடத்தில் இருக்கிறார். அங்கிருந்து தமிழ்ப் பத்திரிகைகளுக்கு நகைச்சுவைத் துணுக்குகள் அனுப்பிக் கொண்டிருப்பார்.

உதாரணம்:–

"குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ரொம்ப நல்ல மருந்து ஒண்ணு கண்டுபிடிச்சுட்டேன்டா...

"என்ன மருந்து?"

"எலுமிச்சம்பழ ஜூஸ்."

"அப்படியா? எப்ப எடுத்துக்கணும்... ஆரம்பிக்கறதுக்கு முன்னாலா... இல்லை அது முடிஞ்சப்புறமா?"

"ரெண்டும் இல்லை முட்டாளே... அதுக்குப் பதிலா."

இது பிரசுரமாகவில்லை.

www.writersujatha.com